**நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டம் - 2020**

நிதித் துறை நவீனமயமாக்கல் செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திற்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2017 ஒக்தோபர் 04 ஆந் திகதிய 6006 ஆம் இலக்க நிதி உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

நிதி உடன்படிக்கையின் பிரகாரம், நிதி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மத்திய வங்கி, பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழு மற்றும் இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிதி சந்தையின் வினைத்திறனை அதிகரித்தல் மற்றும் நுண், சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் மற்றும் தனிநபர்களிற்கிடையே நிதி சேவைகளை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு பங்களிப்பு செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நிதி உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 13,125 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியனானதுடன் முழுத் தொகையும் சர்வதேச அபிவிருத்தி சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 ஒக்தோபர் 18 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வு அவதானிப்புக்கள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபட்டவர்களை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

## 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறுகள் | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | தாமதங்களிற்கான காரணம் |
|---|---|---|---|---|
| | எதிர்பார்க்கப்பட்ட பௌதீகச் செயலாற்றல் | அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் | | |
| | அலகு | அலகு | | |
| கூறு - 01 | 13 விநியோக இணைப்பு பெறுபேறுகள் (Disbursement Linked Results) (டிஎல்ஆர்) | 03 விநியோக இணைப்பு பெறுபேறுகள் | செயற்திட்ட மதிப்பீட்டு ஆவணத்தின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்துகொள்ளப்படுவதற்கு பட்டியலிடப்பட்ட 10 விநியோக இணைப்பு பெறுபேறுகள் அத் திகதியில் உள்ளவாறு அடைந்துகொள்ளப்பட்டிருக்கவில்லை. எனினும், 2020 ஏப்ரலில் மேற்கொள்ளப்பட்ட நிதி உடன்படிக்கைக்கான திருத்தத்தின் பிரகாரம் இந்த வழங்கல் இணைப்பு பெறுபேறுகளை அடைந்துகொள்ளும் ஆண்டு 2021 ஆம் ஆண்டாகத் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. | அமுல்ப்படுத்துவதில் தாமதம். |
| கூறு - 02 | மூன்று ஒழுங்குபடுத்தல் நிறுவனங்களின் நிறுவன இயலளவை வலுப்படுத்துதல் | - | கூறுகள் 02 இன் கீழ் ஒழுங்குமுறையாளர்களின் நிறுவன இயலளவை வலுப்படுத்துவதற்கான பெறுகை பணிகளில் ஏற்பட்ட தாமஙமகள் காரணமாக இதன் செயன்முன்னேற்றம் பலவீனமாக காணப்பட்டது. | பெறுகை செயன்முறையில் தாமதம். |

**முகாமைத்துவத்தின் பதில்** 2021 ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்யப்படுதற்கு எதிர்பார்க்கப்படுகிறதுடன் கூறுகள் 02 இன் கீழ் பெரும்பாலான பெறுகை நடவடிக்கைகள் காரணமாக 2021 ஆம் ஆண்டிற்குள் பூர்த்தி செய்யப்பட்டு வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**கணக்காய்வாளரின் பரிந்துரை** அனைத்து இலக்குகளையும் குறித்துரைத்தவாறு அடைந்துகொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**2.2 பயன்படுத்தப்படாத வளங்கள்**

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மொத்த ஒதுக்கீட்டில் ரூபா 430.3 மில்லியன் மீளாய்வாண்டிற்கான செயற்திட்டச் செயற்பாடுகளுக்காக பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தன, 17 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 74.96 மில்லியன் தொகை மாத்திரமே செயற்திட்டத்தினால் பயன்படுத்தப்பட்டது. | பட்டியலிட்டவாறு வழங்கல் இணைப்பு பெறுபேறுகள் அடைந்துகொள்ளப்படாததன் காரணமாகவும் பெறுகை செயன்முறையில் தாமதம் ஏற்பட்டதாலும், நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்றுநோய் காரணமாகவும், ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியேற்பாடு எதிர்பார்க்கப்பட்டவாறு பயன்படுத்தப்பட முடியாதிருந்தது. | குறித்துரைத்தவாறு அனைத்து இலக்குகளையும் அடைந்து கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் ஒதுக்கப்பட்ட நிதியை அதிகபட்சமாக பயன்படுத்த வேண்டும். |
| (ஆ) | செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 13,125 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 75 மில்லியன் ஆகும். செயற்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும், 2020 திசெம்பர் 31 அளவில் மொத்தக் கடன் பயன்பாடு ரூபா 577.11 மில்லியன் தொகையாகும். அதாவது செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயத்தின் 4 சதவீதம் மாத்திரமேயாகும். | 10 வழங்கல் இணைப்பு பெறுபேறுகள் 2021 ஆம் ஆண்டில் அடைந்து கொள்ளப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாலும், கூறு 02 இன் கீழ் பெரும்பாலான பெறுகை நடவடிக்கைகள் 2021 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டு வழங்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுவதாலும், அக் கொடுப்பனவுகளை பயன்படுத்துதல் 2021 ஆம் ஆண்டில் பயன்பாட்டை கணிசமானளவு அதிகரிக்கலாம். | ஒதுக்கப்பட்ட மொத்த நிதிகளையும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |